பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

24 01 2026 SATUEDAY 7 15 AM

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இன்று லக்னோவில் நடைபெறும் 'உத்தரப் பிரதேச தின' கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றுகிறார்.

2. எரிசக்தி துறையில் நாடு குறுகிய காலத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டியுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

3. மேற்குவங்க மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளின் போது சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்பட்டால் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட அதிகாரிகளுக்கு அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி அறிவுறுத்தியுள்ளார்.

4. பங்களாதேஷில் தற்போதைய சூழலில் தேர்தல் சுமுகமாக நடைபெற வாய்ப்பில்லை என்று முன்னாள் பிரதமர் திருமதி ஷேக் ஹசீனா கூறியுள்ளார்

5. மஸ்கட் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Manush Shah - Diya Chitale இணை கலப்பு இரட்டையர் பிரிவில் பட்டம் வென்றது.

>>>>>><<<<<<

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இன்று லக்னோவில் நடைபெறும் ‘உத்தரப் பிரதேச தின’ கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றுகிறார்.

'ராஷ்டிர பிரேர்ணா ஸ்தல்' மைதானத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்ச்சியின் போது, ‘ஒரு மாவட்டம் ஒரு உணவு வகை’ என்ற புதிய திட்டத்தை அவர் தொடங்கி வைக்கிறார்.

இந்தத் திட்டத்தின் கீழ், உத்தரப்பிரதேசத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தனித்துவமான பாரம்பரிய உணவு வகைகள் அடையாளம் காணப்படுவதுடன், அவற்றிற்கு சந்தை வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படும்.

இதன் மூலம் அந்த உணவு வகைகள், தேசிய மற்றும் உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற வழிவகை செய்யப்படும்.

இந்தக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, 'சர்தார் படேல் தொழில் மண்டலத் திட்டத்தையும்' திரு. அமித் ஷா தொடங்கி வைக்கிறார்.

>>>>>><<<<<<

எரிசக்தி துறையில் நாடு குறுகிய காலத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டியுள்ளதாக மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனை தெரிவித்த அவர், 4வது இந்திய எரிசக்தி வாரத்தையொட்டி வரும் 27-ஆம் தேதி முதல் 30-ஆம் தேதி வரை கோவாவில் பிரம்மாண்டமான நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

எரிசக்தி பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் நீடித்த வளர்ச்சி ஆகியவற்றில் இந்தியாவின் உறுதியை வெளிப்படுத்துவதாக இந்த நிகழ்ச்சிகள் அமையும் என்று அவர் தெரிவித்தார்.

ஐக்கிய அரபு அமீரகம், கனடா, நெதர்லாந்து மற்றும் ஓமன் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 17 அமைச்சர்கள் மற்றும் துணை அமைச்சர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்பதை உறுதி செய்துள்ளதாக திரு திரு. ஹர்தீப் சிங் புரி கூறினார்.

எரிசக்தி வார விழாவில் 75 ஆயிரம் பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர். 180 சர்வதேச நிறுவனங்கள் உட்பட 600-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கண்காட்சியில் தங்களது எரிசக்தி சாதனங்களை காட்சிப்படுத்தவுள்ளன.

>>>>>><<<<<<

குளிர்சாதனங்கள், LED விளக்குகள் உள்ளிட்ட பொருட்களுக்கான உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகை திட்டத்தின் நான்காவது சுற்றில், 863 கோடி

ரூபாய் முதலீடு செய்ய முன்வந்துள்ள ஐந்து நிறுவனங்களை மத்திய அரசு தேர்ந்தெடுத்துள்ளது.

இது குறித்து வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த ஐந்து நிறுவனங்களும் குளிர்சாதனங்களுக்கான உதிரிபாகங்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளதாகவும், இவை 2027-28 நிதியாண்டிற்குள் 8 ஆயிரத்து 300 கோடி ரூபாய்க்கும் அதிகமான உற்பத்தியை எட்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் கூடுதலாக ஆயிரத்து 799 நேரடி வேலைவாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகை திட்டத்தின் நான்காவது சுற்றின் கீழ் பெறப்பட்ட 13 விண்ணப்பங்களை ஆய்வு செய்த பிறகு, இந்த ஐந்து நிறுவனங்களும் தற்காலிகமாக தேர்வு செய்யப்பட்டுள்ளதாக அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

மேற்குவங்க மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் அல்லது அது தொடர்பான விசாரணைகளின் போது சட்டம் ஒழுங்கு பாதிப்பு ஏற்பட்டால், சம்பந்தப்பட்டவர்கள் மீது உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும் என்று அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி அறிவுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கடந்த ஜனவரி 19-ஆம் தேதியன்று உச்சநீதிமன்றம் வழங்கிய உத்தரவை சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறப்புத் தீவிர திருத்தப் பணி நடைபெறும் மையங்களிலோ அல்லது அரசு அலுவலகங்களிலோ வன்முறை, அரசு சொத்துக்களைச் சேதப்படுத்துதல், தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் மற்றும் ஊழியர்களை அச்சுறுத்துதல் அல்லது தாக்குதல் போன்ற சம்பவங்கள் நடந்தால், உள்ளூர் காவல் நிலையத்தில் உடனடியாக புகார் அளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தப் புகாரின் நகல்கள் சம்பந்தப்பட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், குறிப்பிட்ட பகுதிகளில் வன்முறை அல்லது அரசு சொத்துக்கள் மீதான தாக்குதல் தொடர்ந்தால், அந்தப் பகுதிகளில் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி தொடர்பான விசாரணைகளை காலவரையறையின்றி நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் திருமதி ஷேக் ஹசீனா, அந்நாடு தற்போது சந்தித்து வரும் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு மற்றும் பாதுகாப்பற்ற சூழல் குறித்து மிகுந்த கவலை தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற ஊடக சந்திப்பு நிகழ்ச்சியில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட அவரது உரை வெளியிடப்பட்டது.

பங்களாதேஷ் முழுவதும் கும்பல் வன்முறையும் தீவிரவாதமும் பரவி வருவதாகவும், சிறுபான்மையினர் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுவதாகவும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

வரலாற்றிலேயே மிகவும் அபாயகரமான கட்டத்தை நோக்கி பங்களாதேஷ் சென்று கொண்டிருப்பதாக கூறியுள்ள திருமதி ஷேக் ஹசீனா, அங்கு மீண்டும் ஜனநாயகத்தை நிலைநாட்டி, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சம்மதப்பட்ட தரப்பினரை வலியுறுத்தியுள்ளார்.

மேலும், வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வந்து பொதுச் சேவைகள் தடையின்றி இயங்குவதை உறுதி செய்ய வேண்டும் என்றும், பெண்கள், சிறுமிகள் மற்றும் சிறுபான்மையினரின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அரசியல் உள்நோக்கத்தோடு பங்களாதேஷ் அவாமி லீக் மற்றும் இதர எதிர்க்கட்சியினரை அச்சுறுத்தும் செயல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் திருமதி ஹசீனா வலியுறுத்தினார்.

>>>>>><<<<<<

12-வது கொல்கத்தா சர்வதேச குழந்தைகள் திரைப்பட விழா நேற்று கோலாகலமாகத் தொடங்கியது.

வங்காளத்தின் கலாச்சார பாரம்பரியத்தை ஆராய்தல்' என்ற கருப்பொருளில் இந்த ஆணடுக்கான திரைப்பட விழா நடைபெறுகிறது.

இந்த விழாவை 'நயன் ரகஸ்யா' திரைப்படப் புகழ் இளம் நடிகர் திரு அபினவ் பருவா, தொடங்கி வைத்தார்.

புகழ்பெற்ற இயக்குனர் திரு சத்யஜித் ரே-யின் ‘சோனார் கெல்லா’ திரைப்படம் முதல் திரைப்படமாக திரையிடப்பட்டது.

இந்த மாதம் 29-ம் தேதி வரை நடைபெறவுள்ள இந்த விழாவில், 32 நாடுகளைச் சேர்ந்த 180 திரைப்படங்கள் திரையிடப்பட உள்ளன.

>>>>>><<<<<<

2018-ஆம் ஆண்டு நிகழ்ந்த பீமா கோரேகான் வன்முறை வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்ட சாகர் கோர்கே மற்றும் ரமேஷ் கெய்ச்சோர் ஆகியோருக்கு மும்பை உயர்நீதிமன்றம் ஜாமின் வழங்கியுள்ளது.

இந்த வழக்கை நேற்று விசாரித்த நீதிபதிகள் திரு. ஏ.எஸ். கட்கரி மற்றும் திரு. எஸ்.சி. சந்தக் ஆகியோர் அடங்கிய அமர்வு, தலா ஒரு லட்சம் ரூபாய் உத்தரவாதத் தொகை செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஜாமின் வழங்கியது.

மேலும், மாதந்தோறும், முதல் திங்கட்கிழமைகளில் மும்பையிலுள்ள தேசிய புலனாய்வு நிறுவன அலுவலகத்தில் ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

எல்கார் பரிஷத் - பீமா கோரேகான் வழக்கில் மொத்தம் 16 பேர் கைது செய்யப்பட்டனர். இதில் 2018-ஆம் ஆண்டில் புனே காவல்துறையினரால் ஒன்பது பேரும், பின்னர் இந்த வழக்கின் விசாரணையை தேசிய புலனாய்வு முகமை பொறுப்பேற்ற பிறகு ஏழு பேரும் கைது செய்யப்பட்டனர்.

குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரான ஸ்டான் சுவாமி 2021-ஆம் ஆண்டு காவலில் இருந்தபோதே உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

>>>>>><<<<<<

பாகிஸ்தானின் வடமேற்கு கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் நேற்று நடைபெற்ற திருமண கொண்டாட்டத்தின் போது நிகழ்த்தப்பட்ட தற்கொலை படைத் தாக்குதலில் 7 பேர் கொல்லப்பட்டனர். 25 பேர் காயமடைந்தனர்.

குரேஷி மோர் அருகே உள்ள அமைதிக்குழுத் தலைவர் திரு. நூர் ஆலம் மெஹ்சுத் என்பவரது இல்லத்தில் இந்தத் தாக்குதல் நடந்ததை மாவட்ட காவல்துறை உறுதிப்படுத்தியுள்ளது.

>>>>>><<<<<<

அமெரிக்காவின் பெரும்பாலான பகுதிகளில் பனிப்பொழிவு, உறைபனி மற்றும் பனிப்புயல் உருவாகியுள்ளது.

இதன் காரணமாக சிகாகோ மற்றும் மத்திய-மேற்கு நகரங்களில் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

டெக்சாஸ் முதல் நியூ இங்கிலாந்து வரையிலான நாட்டின் பெரும்பாலான பகுதிகளை இந்தப் புயல் கடுமையாக பாதித்துள்ளது.

இந்த புயலானது ஒரு சூறாவளிக்கு இணையான சேதங்களை ஏற்படுத்தக்கூடும் என்று வானிலை ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

இதனால் மின்வெட்டு ஏற்படுவதுடன், சாலைகளில் பனி படர்ந்து போக்குவரத்து பாதிக்கும் சூழல் உள்ளது.

இதன் விளைவாக விமான சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

பனி மற்றும் உறைபனி காரணமாக சுமார் 17 கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

>>>>>><<<<<<

மஸ்கட் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Manush Shah - Diya Chitale இணை கலப்பு இரட்டையர் பிரிவில் பட்டம் வென்றது.

நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் இந்த இணை, 3-2 என்ற ஆட்டக்கணக்கில் சீனாவின் Huang Youzheng - Shi Xunyao இணையை வென்றது.

>>>>>><<<<<<

நியூஸிலாந்துக்கு எதிரான இரண்டாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ராய்ப்பூரில் நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் விளையாடிய நியூஸிலாந்து, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 208 ரன் எடுத்தது.

209 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய இந்தியா, 15 புள்ளி இரண்டு ஓவரில் 3 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து, இலக்கை எட்டி வெற்றிபெற்றது.

>>>>>><<<<<<

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், தில்லி அணி இன்று பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

வதோதராவில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>>>>END<<<<<<